மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை: **திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

(2054 திருவள்ளுவர் ஆண்டு மார்கழி திங்கள் 18–ம் நாள்)

2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ம் நாள் புதன்கிழமை

**இ.ம. எண்.13/2023 in அ.வ.எண்.315/2009**

1. சிவசங்கர் .......மனுதாரர்/வாதி
2. பிச்சாயி
3. சின்னம்மாள்
4. சரோஜா
5. பெருமாள்
6. பாலாமணி ......உத்தேச வாதிகள்

/எதிர்/

1. கோனரி
2. விஸ்வநாதன்
3. பாலமணி
4. சரோஜா (Died)
5. அயினாள்
6. லெட்சுமி .........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
7. நடராஜன்
8. பிரேமா
9. சுதாகர்
10. சித்ரா
11. பாஞ்சாள்

........எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பு 11.12.2023 அன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மதியழகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.K.கண்ணுசாமி அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையையும், இருதரப்பு சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

1) இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 6 விதி 17 பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

2.1) மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தைப் பொருத்து மனுதாரரின் தகப்பனார் இராமசாமி வாரிசுகளுக்கும் உரிமை உள்ளதென்றும், இராமசாமி வாரிசுகளை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் கட்சி செய்ததின் பேரில் இ.ம.எண்.597/2014 என்ற மனுவை தாக்கல் செய்து 18.01.2016–ம் தேதியன்று மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இ.ம.எண்.597/2014–ல் பாஞ்சாள் என்பவரை வாதியாக சேர்த்திட குறிப்பிட்டு இருந்ததாகவும், பாஞ்சாள் வாதியாக சேர மறுத்துவிட்டதால் மேற்படி பாஞ்சாள் என்பவரை வாதியிலிருந்து 11–ம் பிரதிவாதியாக திருத்தம் செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–(1,3,5 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள்) 1ம் எதிர்மனுதாரரின் எதிருரையை ஒத்தேற்பு செய்துள்ளனர்.</u>**

3.1) மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இவ்வெதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். இம்மனு சட்டத்தின்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இம்மனு ஆரம்ப காலக்கட்டத்திலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3.2) மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதும் கற்பனையானதும் ஆகும். அசல் வழக்கானது விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன் கீழ் 3ம் தரப்பினரை சேர்க்க கோரி இ.ம.எண். 597/2014 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தார். மேற்படி தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே அசல் வழக்கின் 4ம் பிரதிவாதியான சரோஜா 17.08.2012–ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்து போன நபரின் வாரிசுகளை இ.ம.எண். 597/2014 என்ற மனுவில் கட்சி சேர்க்காததால் 20.11.2015 அன்று, மனு 4–ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது. 4–ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யாமல் அசல் வழக்கையே திருத்தம் செய்ய இயலாது.

3.3) பாஞ்சாள் என்பவரை வாதியிலிருந்து பிரதிவாதியாக மாற்றம் செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படாமல் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய இயலாது என்றும், வாதியிலிருந்து பிரதிவாதியாக மாற்றம் செய்வதற்கான மனு எதுவும் இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படவில்லை

என்றும், உரிய சட்டப்பிரிவு இருக்கும்பொழுது பிரிவு 151–ன் கீழ் பரிகாரம் கோர இயலாது என்பதாலும், அசல் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்துவதற்காகவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தா? இல்லையா? என்பதாகும்.

5) மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மேலும் அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில், மனுதாரரின் தகப்பனார் ராமசாமியின் வாரிசுகளுக்கும், வழக்கு சொத்தில் பங்குள்ளதாகவும், ராமசாமியின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் கட்சி சேர்க்காததால் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதென பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்ததன் பேரில் ராமசாமியின் வாரிசுகளை கட்சி சேர்க்க மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனு இ,ம,எண்.597/2014 ஆனது 11.12.2015–ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு இ.ம.எண்,597/14 ல் கண்டுள்ள ராமசாமியின் வாரிசான பாஞ்சாள் என்பவர் அசல் வழக்கில் வாதியாக இருந்து வழக்கை நடத்த ஒத்துவராததால் அவரை பிரதிவாதியாக திருத்தம் செய்யக்கோரி இம்மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாஞ்சாள் என்பவரை பிரதிவாதியாக மாற்றம் செய்ய கோரி (Transpose the party) தனியாக மனு எதுவும் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படவில்லை என்பதாலும், இ.ம.எண்.594/2014 ஆனது நிலுவையில் உள்ளபோது 4–ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை கட்சி சேர்க்க நடவடிக்கை எடுக்காததால், 4–ம் பிரதிவாதிக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், 4–ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யாமல் அசல் வழக்கில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இயலாது என ஆட்சேபணை செய்திருந்தாலும், இ.ம.எண்.597/2014 மனுவானது ராமசாமி என்பவரின் வாரிசுகளை கட்சி சேர்ப்பதற்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

8) மேலும் இ.மஎண். 597/2014 மனுவானது அனுமதிக்கப்பட்ட பிறகு பாஞ்சாள் என்பவர் வாதியாக இருந்து வழக்கை நடத்த முன்வராததால் பிரதிவாதியாக திருத்தம் செய்யக்கோரி மனுத்தாக்கல் செய்திருப்பதாலும், உரிய சட்டப்பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யாமல் பிரிவு 151 கீழ் மனுத்தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்திருந்தாலும், உரிய சட்டப்பிரிவுன் கீழ் மனுத்தாக்கல் செய்யவில்லை என்பதாலேயே மனுவை தள்ளுபடி செய்ய இயலாது என்பதோடு, இவ்வழக்கானது 2009–ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருவதாலும், ராமசாமியின் வாரிசுகளை கட்சி சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட மனு 2015–ம் ஆண்டே அனுமதிக்கப்பட்டதாலும், வாதியாக இருந்து வழக்கை நடத்த ஒத்துவராத நிலையில் அந்த நபரை பிரதிவாதியாக சேர்க்க கோரி தனியாக மனுத்தாக்கல் செய்யாமல் திருத்தம் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளதால்

அனுமதிக்கக்கூடாது என மறுப்பு தெரிவித்தாலும் கூட தரப்பினராக இருந்து வழக்கை நடத்த முன்வராத தரப்பினரை எதிர்தரப்பினராக கட்சி சேர்த்து வழக்கை நடத்த அனுமதிக்க தன்னிச்சையாக உத்தரவிட இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளதாலும், பாஞ்சாள் என்பவரை பிரதிவாதியாக வழக்கில் கட்சி சேர்த்து வழக்கை நடத்த அனுமதிப்பதோடு அசல் வழக்கில் 11–ம் பிரதிவாதியாக திருத்தங்கள் மேற்கொள்ளவும், மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

9) முடிவாக,

மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது இன்று 03.01.2024–ம் தேதியன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u>**

இல்லை.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.